# செந்தமிழ்

தொகுதி : 94 ஜூன் 2000 பகுதி : 6

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடை நம்பி | உறுப்பினர் |
| திரு.எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர். | நா. பாலுசாமி (ஆசிரியர்) |
| பேரறிஞர். | தமிழண்ணல் |
| பேரறிஞர். | செ.கந்தசாமி |
| டாக்டர். | என். சேதுராமன் |
| பேரறிஞர். | ம.ரா.போ. குருசாமி |
| பேரறிஞர். | சி.கதிர் மகாதேவன் |
| பேரறிஞர். | கு. துரைராசு |
| பேரறிஞர். | அ.அ. மணவாளன் |
| பெரும் புலவர். | இரா. இளங்குமரன் |
| பேரறிஞர். | அ. தட்சிணா மூர்த்தி |
| பேரறிஞர். | எஸ்.எம். கமால் |
| பேரறிஞர். | ஈ. கி. இராமசாமி |
| பேராசிரியர். | சே. அரிராமநாதன் |
| பேரறிஞர். | அ.மா. பரிமணம் |

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 1000 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# பொருளடக்கம்

1. சைவ சித்தாந்தமும் திருவள்ளுவரும் ..... 191

க.சி. அகமுடைநம்பி

2. சங்க நூல்களிற் சிற்பக் குறிப்புக்கள் ...... 205

பேரறிஞர் அ.ம. பரிமணம்

3. தமிழகத்தில் கணபதி ...... 214

பேரறிஞர் ந. சுப்பிரமணியன்

4. யானைமலை நரசிகப்பெருமாள் கோவில் ..... 221

பேரறிஞர் வெ.வேதாசலம்

# சைவ சித்தாந்தமும் திருவள்ளுவரும்

க.சி. அகமுடை நம்பி, பி.இ., எம்.ஏ.,
2/402 அன்பு நகர்
மருதுபாண்டியர் தெரு
அண்ணாநகர் (அஞ்சல்)
மதுரை - 625020.

திருமூலர் அருளிய திருமந்திரம், சைவ சித்தாந்தம் எனும் சமயக் கோட்பாட்டின் கருப்பொருளாயிற்று. சைவப் பெரியார்கள் பலர் தோன்றுவதற்கும் தென்னிந்தியாவில் இச்சமய நெறி தழைத்து வளர்வதற்கும் திருமந்திரம் வித்தாக அமைந்தது. சைவம் தழைப்பதற்கு நாயன்மார்கள் பெரிதும் காரணமாயினர்.

ஆயின், எந்த ஒரு சமயத்தையும் சாராமல், பொதுவாக மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நெறிமுறைகளை வகுத்தளித்த திருவள்ளுவரும் கூட, உலக ஒருமைக்கும் மனித நேயத்துக்கும் உறுதுணையாய் விளங்குகின்ற சைவ சமய நெறிக்கு வலுவூட்டுகிறார் என்பது இவண் கருதற்பாலது. சைவத்துக்கு வள்ளுவர் எந்த அளவு வலுவூட்டுகிறார், வள்ளுவத்தின் துணையுடன் சைவ சமயம் மேலும் அதிக வலுவுடன் மனித உயர்வுக்குப் பாடாற்ற முடியுமா என்றெல்லாம் கருதிப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சைவத்தின் கருப்பொருளாக உள்ளது பசு-பதி-பாசம் என்ற முக்கோணம். பதி சிவன் என்ற இறைப்பேராற்றலையும், பசு பல்வேறு உயிரினங்களையும், பாசம் உயிரினங்களைப் பிணைத்துள்ள தளைகளையும் குறிப்பனவாம்.

மாயையில் கட்டுண்டு கிடக்கும் உயிரினங்களை இறைப் பேராற்றலுடன் இணையுமாறு நெறிப்படுத்தி, ஆற்றுப்படுத்துகிறது சைவ சித்தாந்தம்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்**

என்று சுட்டிக் காண்பிக்கும் திருவள்ளுவர், இறைப் பேராற்றலுடன் மனிதனை வழி நடத்தும் பாங்கிலேயே திருக்குறளை அருளியுள்ளார் என்பது இவண் கருத்திற் கொள்ள வேண்டுவதாகும்.

சைவ சமயக் கோட்பாட்டின்படி, பாசம் என்ற தளை மூன்று மலங்களைக் கொண்டதாகும். அவை, ஆணவமலம், கர்ம மலம், மாய மலம் என்பனவாம். ஆணவ மலம் என்பது ஓர் உயிரினத்தின் அடித்தளமாய் - மூலமாய் - அமைந்துள்ள அறியாமை. இதன் காரணமாக ஒவ்வோர் உயிரும் அது சார்ந்துள்ள உடல் அளவிலேயே தன்னை வரையறுத்துக் கொள்கிறது. இதனால் அது, தன்னிடமுள்ள மெய்யான ஆற்றலைப் புரிந்துகொள்ளாமல், உடல் அளவிலான இன்பங்களைத் துய்ப்பதும், புற வாழ்வில் உழல்வதுமாகக் கர்ம மலத்திற்கும், அதன் நீட்சியாகப் பிறவிச் சுழற்சிக்கும் காரணமாகிறது. மூன்றாவது மலமாகிய மாய மலம், பொருள்கள் மீது பற்று வைப்பதால் உண்டாகிறது. ஒரு மனிதன் ஆன்ம நெறியில் பயிற்சி பெற்று ஆன்ம ஞானம் பெறுவதாலும், இறைவன் மீது அவன் கொண்டுள்ள பேரன்பினாலும் கர்ம மலம், மாய மலம் இரண்டிலிருந்தும் விடுபடலாம்.

இந்த ஆன்ம ஞானத்தைத் திருவள்ளுவர் மெய்யறிவு என்கிறார். ''பிறப்பு எனும் பேதைமை நீங்கச் சிறப்பு எனும் செம்பொருள் காண்பது அறிவு''. இரு மலங்களும் விடுபடுவதையே இக்குறள் பேசுகிறது. இங்கு அறிவு என்பது ஆன்ம ஞானமேயாகும்.

இரண்டு மலங்களும் விடுபட்டாலும், முதலாவதாகிய ஆணவ மலம் அகன்றுவிடுவதில்லை. இறையருளால் மட்டுமே இதிலிருந்து மனிதன் விடுபடக்கூடும். ஏனெனில், மனிதனின் பிறப்பு முதல், மூலமாக அமைந்துள்ளது ஆணவமலம். ஊழ்வினைப் பயனும் இதற்குக் காரணமாகலாம். இதிலிருந்து அவ்வளவு எளிதாக மனிதன் விடுபட முடியாது என்பதைத் திருவள்ளுவரும், 'ஊழ்' அதிகாரத்தில் சுட்டிக் காண்பிக்கிறார்.

**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை அறிவே மிகும்.**

இங்கு உண்மை அறிவு என்பது, சைவம் குறிப்பிடுகின்ற ஆணவ மலத்தின் விளைவே என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

**நான்கு படிநிலைகள்**

சிவத்தொண்டன் ஒருவன் சிவலோகம் அடைவதற்கு நான்கு படிநிலைகளை சைவ சித்தாந்தம் முன்வைக்கிறது. (ச்)சரியா,கிரியா,யோகா,ஞானம் ஆகியவையே அவை.

**முதல் படிநிலை**

முதல் படிநிலையில் ஒரு சைவன் சிவலோகத்தில் குடிபுகப் பெருவிருப்பம் கொண்டவனாதல் வேண்டும். அந்த லோகத்திற்கு முற்றிலும் தகுதியுடையவனாகத் தன்னைத்தானே செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

மாணிக்கவாசகர் வழுத்துகின்ற 'நமசிவாய வாழ்க,நாதன் தாள் வாழ்க' என்பது முதல் படி. நமசிவாய என்று ஓயாமல் ஓதிவருகிறவன் சிவலோகத்தில் வாழ முற்படுகிறான் என்று சைவ ஆச்சாரியர் கூறுவர். அப்படி ஒருவன் ஓதுதல் மூலம்,ஐந்தெழுத்துக்கு இலக்காயிருக்கும் பொருள், தனக்கும் பிரபஞ்சத்திற்கும் நாதனாயிருக்கிறார் என்பதை அவன் உணர்கிறான்.

அதன் காரணமாக, இறைவனுடைய விருப்பத்துக்கேற்பத் தன்னுடைய வாழ்வைப் பண்படுத்திக் கொள்கிறான். இந்த முதல் படியில் அவன் '*சாலோக்ய முக்தி*' பெறுகிறான் என்பது கோட்பாடு.

இந்த முதல் படிநிலையில், தொண்டன் தன்னைத் திருத்திச் செம்மைப்படுத்திக்கொள்வதற்குச் சில ஒழுகலாறுகளைத் திருமூலர் காண்பிக்கிறார், திருவள்ளுவரும் அவற்றை வலியுறுத்துவதைச் சைவர்கள் கருதிப் பார்க்கலாம்.

நிலையாமையை இருவருமே மனித இனத்துக்கு நினைவுபடுத்துகிறார்கள். கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை போன்றவற்றையும் திருமூலரும் வள்ளுவரும் பெரிதும் வலியுறுத்துகிறார்கள்.

புலால் உண்பவரைப் 'பொல்லாப் புலாலை நுகரும் புலையர்' என்று இகழ்கிறார் திருமூலர் என்றால்,

**உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்**
**புண்அது உணர்வார்ப் பெறின்**

என்று கடிந்துரைக்கிறார் வள்ளுவர். 'கொல்லாமை' பற்றிக் கூறும்போது திருமூலர்,

**"பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர் மற்றோர்**
**அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்"**

என்கிறார். வள்ளுவரோ,

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்**

என்று கூறித் திருமூலரை வழிமொழிகிறார்.

**இரண்டாவது படிநிலை**

நல்ல சைவன் ஒருவன் இவ்வுலக வாழ்வையே சிவலோக வாழ்வாக மாற்றிக்கொள்ள முடியும். ஆயின், ஆத்ம சாதகம் செய்கின்ற சைவன், சிவபெருமான் செய்கின்ற செயல்களை அறிந்துகொண்டு, அச்செயல்களில் தனது பொறுப்பையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

**நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து நான் நடுவே**
**வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்**
**ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்**
**ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே**

என்றவாறு சிவத்தொண்டன், சிவத்துக்குரிய பகுதியைத் தன் வாழ்க்கைக்கென்றே அமைந்ததாகவும், மற்றும் இவ்வுலகுக்குரிய பகுதியை வெறும் விளையாட்டாகவும் நாடகமாகவும் கருதிக்கொள்ள வேண்டும்.

இந்த இரண்டாம் படிநிலையில் உள்ள சைவன், சிவபெருமானுக்கு அருகாமையில் வந்துள்ளான். தனது அன்பை

அவன் செயலில் காண்பிக்க வேண்டும். 'ஆடகச்சீர்மணிக்குன்றே' என்று இறைவன் போற்றப்படுகிறார். *நடராசப் பெருமானே என்பது* அதன் பொருள்.

ஐந்து செயல்ககளை (பஞ்ச கிருத்தியங்களை) விளையாட்டுப்போலும் இறைவன் செய்து வருகிறார். அதற்கிடையிலும், தமது பெருநிலையிலிருந்து அவர் பிறழ்வதில்லை. ஆதலால் அவர் மணிக்குன்று. அண்டங்கள் யாவையும் தாமுள வாக்குதலும், அவற்றை நிலைபெறச் செய்வதும், உரிய காலத்தில் அவற்றை ஒடுக்குவதும், அதற்கிடையில் உயிரினங்களிடமிருந்து உண்மையைச் சிறிது மறைத்து வைத்திருப்பதும், பின்னர் வழுத்துபவர்க்கு அருள்புரிவதும் ஆகிய ஐந்து செயல்பாடுகள் அவருடைய அலகிலா விளையாட்டு. அவருடைய பெருவிளையாட்டிலே பங்கெடுத்துக் கொள்பவர்களே அவருடைய மெய்யன்பர்கள் ஆகிறார்கள்.

மனிதர் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வகையை இறைவன் கொடுத்திருக்கிறார். அதை ஒரு சிவத்தொண்டன், தன் செயல் என்று கருதுவதைவிட இறைவன் விதித்துள்ள கடமை என்று கொள்ளவேண்டும். இறைவனிடம் தான் கொண்டுள்ள அன்பையெல்லாம் தன் செயலில் காண்பிக்கவேண்டும். இவ்வாறு இறைவனுக்குத் தொண்டாற்றுகின்ற அளவுக்குத் தொண்டனுடைய ஆற்றல் வளர்கிறது. இறைவன் எப்போதும் தன் அருகாமையில் இருப்பதாகவே தொண்டன் உணர்கிறான். 'முக்தி' எனும் ஊதியத்தைக் கேளாது, எத்தனை பிறவிகள் எடுத்தாலும் இறைவனுக்கு இடையறாது பணிவிடை செய்துகொண்டிருக்க உள்ளன்போடு விரும்புபவனாக அவன் இருத்தல் வேண்டும்.

**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என் ஆற்றும் கொல்லோ உலகு?**

என்று திருவள்ளுவர் இதனைத் தெளிவுபடக் கூறுகிறார். மானுடர் அனைவருக்குமாக இது கூறப்பட்டாலும் சிறப்பாகச் சைவர்கள் இதனைக் கருத்தில் கொள்ளலாம். மேலும்,

**தான்ஆற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**

என்று வள்ளுவர் கூறுவதையும் சைவத் திருத்தொண்டர் தம் மனதில் கொள்ள வேண்டுவது சாலச் சிறந்தது.

**மூன்றாவது படிநிலை**

திருத்தொண்டன் ஒருவன், சிவபெருமானிடத்துப் பக்தி கொள்ளுதல் மூலம், இறைவனுக்குச் சொந்தமாகிறான், இறைவனையும் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்கிறான். அப்படி அவன் அடைகின்ற பண்பிலே இந்த மூன்றாவது படியில் வந்து நிற்பது 'சாரூப்யம்' என்னும் நிலை. அதே உருவத்தை அடைந்துவிடுவது என்பது இதன் பொருள். வெறும் தோற்றத்தளவில் சிவன் போன்று சைவர்கள் இருந்துவிட்டால் போதாது. தோற்றத்துக்கு ஏற்ற பக்குவமும் பண்பும் அவர்களிடத்து அமைய வேண்டும். அப்பண்பு எத்தகையது என்பதை மாணிக்கவாசகர்,

**கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை**
**தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ**
**தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்**
**காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ**

என்று படம்பிடித்துக் காண்பிக்கின்றார். சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடங்களுள் முக்கியமானது மயானம். அதற்கு 'ருத்திரபூமி' என்பது மற்றொரு பெயர். 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே' என்று இறைவன் அழைக்கப்படுகிறார். சிவபெருமானுடைய 'சான்னித்திய'த்தை உணர விரும்புகிறவர்கள் நடு இரவிலே சுடுகாட்டுக்குச் சென்று அமைதியாகத் தியானம் செய்தால் அதனைத் தெளிவுபட உணரமுடியும் என்பது கோட்பாடு.

'கோயில் சுடுகாடு' என்னும் கோட்பாடு சிவனுக்கு உரியது. அவருக்கு அமைந்துள்ள ஆயிரம் பெயர்களுள் 'ஸ்மசானவாசினன்' (சுடுகாட்டிலே மிளிர்பவன்) என்பது ஒன்று. சிவத்தலமாம் காசிக்கு மகாஸ்மசானம் என்பது மற்றொரு பெயர்.

இரவும் பகலும் சேர்ந்து ஒரு நாள் ஆவதுபோல், வாழ்வு-மாய்வு ஆகிய இரண்டும் உயிரினங்களுக்கெல்லாம் உரியவையாகின்றன. இதனை,

**உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு**

என்பார் திருவள்ளுவர். வாழ்வுக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதுபோல், மரணத்துக்கும் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்பவனே உயிர்வாழ்வின் உட்பொருளை அறிந்தவனாகிறான். பிரபஞ்சம் முழுவதையும் ஒரு மாபெரும் சுடுகாடு என்று கருதிக்கொள்ளலாம். பிரபஞ்சம் முழுவதிலும் சிவபெருமான் ஊடுருவி நிறைந்துள்ளார். ஆங்குத் தோன்றுகிற உயிர்கள் யாவும் மறைந்து வருவதை ஓயாது கண்டுவருகிறோம்.

இனி, இதற்குமேல்,ஓர் ஆத்மசாதகன் தனது உடலையே சுடுகாடாகக் கருதிக்கொள்ளலாம். அவன் உண்ணும் உணவுவகைகளெல்லாம் உயிர்த்தத்துவத்திலிருந்து வந்தவையே. அவை யாவும் உடலில் ஓயாது தகனமாகிக் கொண்டுள்ளன. மானுட உடம்புக்கு நிகரான சுடுகாடு இயற்கையில் இல்லை என்றே இயம்பலாம். இந்த மானுட உடலில்தான் இறைவனுடைய 'சான்னித்தியம்' சிறப்பாக வெளியாகிறது.

'ருத்திரன்' என்னும் சொல், அழச்செய்பவன் என்று பொருள்படுகிறது. சிவன் என்னும் சொல் செம்மை அல்லது மங்களம் எனப் பொருள்படும். பெரிதும் மங்களகரமாக விளங்கும் சிவன், சில வேளைகளில் 'ருத்திரகாரம்' ஆவதுண்டு.

'காயில் உலகனைத்தும் கற்பொடி காண்' என்பது கோட்பாடு. சிவபெருமான் அண்டங்களையெல்லாம் நொடிப்பொழுதில் துடைக்க வல்லவர். பிரபஞ்சம் எங்கும் உள்ள உயிர்களனைத்தையும் சிற்சில வேளைகளில் தத்தளிக்கும்படி அவர் செய்துவிடுகிறார். மலைபோல் துன்பம் சூழுகின்ற இடத்தும் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்னும் பெருநிலையில் உறுதியாக நிற்பனே சைவன். பிறப்பையும் இறப்பையும் குறித்து வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் அவன்.

சிவபெருமான் முழுமுதற் பொருளாதலால் அவர் தாயுமிலி, தந்தையிலி, ஒப்புயர்வு அற்றவர் அவர், தனக்குவமை இல்லாதவர். யாண்டும் தன்னந்தனியாக அவர் இருக்கிறார். சைவன் ஒருவன் இதனை ஆழமாகக் கருதிப் பார்க்க வேண்டும். இம்மண்ணுலகினுள் தனக்குத் துணையாக யாரையும் அவன் அழைத்துவரவில்லை. அவன் உயிர் துறந்து வெளியேகுங்கால், உற்றார் யாரும் அவனுக்குத் துணையாக வரமாட்டார்கள். ஆகவே, இவ்வையத்தில் அவன் வாழுகின்றபோதே அவன் தன்னந்தனியனாக ஆகிவிடவேண்டும். எல்லாவற்றையும் நீத்து அமைய வேண்டும்.

வாழுகின்றபோதே ஒருவன் மரணத்தை ஏற்றுக் கொள்கின்ற பெருநிலை இது. இந்த நிலையின் பெருமை எத்தகையது?

**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக்கொண் டற்று**

என்று அத்தகைய நீத்தார் பெருமையைத் திருவள்ளுவர் உயர்த்திப் பிடிக்கிறார். சிவனைத் தவிர இம்மண்ணுலகில் தனக்குச் சார்கதி யாருமே இல்லை என்று தனித்திருந்து பழக வேண்டும். அத்தகைய சைவன் துன்பங்களிலிருந்து விடுபட்டவன் ஆகிறான்.

**சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரு நோய்**

என்ற திருவள்ளுவர் கூற்று, திருத்தொண்டர் ஒருவரை மனதிற் கொண்டுதான் கூறப்பட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சைவன் ஒருவன் தீமையைக் கண்டு மிரண்டுபோகக்கூடாது. கொல்புலித்தோல் சிவனுக்கு ஆடையாக அமைந்தள்ளது. சக்தியற்று, செயலற்று அப்பாவியாக இருப்பவன் சைவன் ஆகான். பராக்கிரமத்துடன் வினையாற்றித், தீதைத் துணிந்து அகற்றிட அவன் முன்வர வேண்டும். 'சாரூப்பியம்' அல்லது சிவபெருமானுடைய வடிவத்தை எடுத்தல் என்பதன் பொருள், அவர் போன்று பேராற்றல் படைத்தவன் ஆவதாம்.

## நான்காவது படிநிலை

சொரூபத்திலும் செயலிலும் சிவன்போன்று ஆகிட முயலுகின்ற நான்கு படிநிலைகளில் இந்த நான்காம் படிநிலை மிகவும் கடினமானது. சிவனுடைய அரும்பெரும் செயலை மாணிக்கவாசகர்,

**கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த**
**ஆலால முண்டானவன் சதுர்தான் என்னேடி?**
**ஆலால முண்டிலனேல் அன்றயன்மா லுள்ளிட்ட**
**மேலாய தேவரெல்லாம் வீடுவர்கள் சாழலோ**

என்று மனம் உருகிப் பாடுகிறார். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது கிளம்பிய விஷத்தை உண்டு, இறைவன் அவர்கள் அனைவரையும் உய்வித்தார் என்பது இதன் கருத்து.

வாழ்வு பாற்கடலெனக் கருதப்படுகிறது. நல்லவர்கள், கெட்டவர்கள்-தேவர்கள், அசுரர்கள் எல்லோரும் வாழ்வைக் கடைந்தெடுக்கிறார்கள். அப்படிச் செய்வதால் அவர்களுக்குக் கல்வி கிட்டுகிறது. செல்வம் சேர்கிறது. ஆடை ஆபரணங்கள், வண்டி வாகனங்கள் கிடைக்கின்றன. இவற்றையெல்லாம் பெற்று,துய்த்து வாழ்ந்த பிறகு, இறுதியில் மரணம் எனும் விஷம் வருகிறது. அதனின்றும் மீள எவ்வுயிர்க்கும் இயலுவதில்லை. இறைவனிடம் யார் சரணடைகின்றனரோ, அவர்களை மரணத்திலிருந்து உய்வித்தல் பொருட்டு, அம்மரணம் எனும் விஷத்தைத் தாம் உண்டு, அதனைத் தமது கண்டத்தில் நிறுத்துகிறார். அதனால் அவருக்கு நஞ்சுண்டான் என்றும் நீலகண்டன் என்றும் பெயர்கள் வழங்குகின்றன, பாற்கடலில் வந்த மற்றப் பொருள்களில் அவர் பங்குபெறப் போகவில்லை, ஆனால், அங்கு விளைந்த விஷத்தை, உயிர்களின் நலத்தை முன்னிட்டு அவர் தாமே ஏற்று அருளினார், அதனாலேயே அவர், தியாகராஜன் என்றும், துறவு வேந்தன் என்றும் அழைக்கப்படுகிறார். அதுபோல், பிற உயிர்களின் நலத்துக்காகவே சைவன் ஒருவன் தனது உடல் வாழ்வை ஒப்படைத்து வைத்திருக்க வேண்டும். பிற உயிர்கள் இன்புற்றிருக்க வேண்டி, தான் துன்பத்துக்கு மேல் துன்பத்தை

அமைதியாக ஏற்றுக்கொள்ளுதல் துறவு. ஒவ்வொரு நொடிப்பொழுதும் சிவன் இதனைச் செய்துவருகிறார்.

ஐம்பூதங்கள் வடிவத்தில் சிவன் இலங்குகிறார். அவருடைய தோற்றங்களுள் இவை யாவும் ஸ்தூலமானவையாம். வாழும் உயிர்கள் மண்ணின்மீது மலம் என்னும் விஷத்தைப் போட்டுக்கொண்டே இருக்கின்றன. அதுதான் வாழ்வின் விளைவு. இறைவன் மண்மயமாயிருந்து, மலத்தைத் தூயதாக்குகிறார். உயிர்கள் நீரைச் சிறுநீராக்கிப் பாழ்படுத்துகின்றன. அவர் அதைத் திரும்பவும் நன்னீராக மாற்றி அமைக்கிறார். நீரெல்லாம் ஆவியாக மாறி, மலினப்பட்டவற்றையெல்லாம் எரித்துத் தூய்மைப்படுத்துகிறார். உயிர்கள் விடும் நச்சுக்காற்றை அவர் நல்ல காற்றாக மாற்றியமைக்கிறார். அவர் இவ்வாறு செய்யாவிட்டால் உயிர்கள் அனைத்தும் அழிந்துபோம்.

இவ்வாறு, எண்ணிறந்த உயிர்வகைகளுக்குச் சிவன் அம்மையப்பனாக இருந்து அத்தனை உயிர்களையும் ஓம்பி வருகிறார். ஆனால், அவ்வுயிர்களின் ஆக்கங்களில் அவர் உரிமை கொள்வதில்லை, துறவறத்துக்கொப்ப அவர் பிச்சை எடுத்து உண்கிறார். ஒன்றுக்கும் உதவாத மண்டையோடு அவரது பிச்சா பாத்திரம், யாரும் விரும்பாத பாம்பு அவரது ஆபரணம்.

நச்சுப் பாம்பையும் நல்லதாகக் காண்பவனே சைவன். உலகுக்கு ஓயாமல் அவன் நன்மை செய்துகொண்டிருக்கவேண்டும். ஆனால் எதிலும் அவன் உரிமை பாராட்டக்கூடாது. இத்தகைய பெருவாழ்வே துறவறம் என்ற பெருமை பெறுகிறது. அதிலே தேர்ச்சியடைகின்றவன் 'சிவசாயுஜ்யம்' அடைகிறான்.

சிவசாயுஜ்யத்தின் உட்கருத்தை ஒரு சைவன் அறிந்துகொள்ள வேண்டும். பரந்துபட்ட இந்நிலவுலகில் அதிகமாகப் பரந்திருப்பது கடல். அக்கடலினின்றும் நீர் ஆவியாக மாறி மேலே போகிறது. பின்னர், அதுவே மழையாகவும், உறைபனிக்கட்டியாகவும் பூமிக்கு வருகிறது. விரைவில்,அல்லது சிறிது காலம் கழித்து, அது பல்வேறு இடங்களிலிருந்து திரும்பவும் கடலுக்கு வந்து சேர்கிறது. புறப்பட்ட இடத்திலிருந்து திரும்பவும் அதே இடத்துக்கு வந்துசேர்வது

இயற்கையிலுள்ள அனைத்துப் பொருள்களின் செயலாகும். கடலிலிருந்து புறப்பட்ட நீர் வெளியில் பற்பல இடங்களில் வெவ்வேறு பெயரெடுத்திருந்தது. திரும்பவும் கடலுக்கு வந்தபிறகு அப்பெயர்களையும் வடிவங்களையும் இழந்துவிட்டு, கடல்நீராக ஆகிவிடுகிறது. அந்த நிலை அது பெறும் 'சாயுஜ்யம்'.

அதேபோல், உயிர்வகைகள் யாவும் இறைவனிடத்திலிருந்து கிளம்பி, பல பிறவிகள் எடுத்து, கல்லாக, புல்லாக, புழுவாக, பறவையாக, விலங்காக, மனிதனாக நெடும்பயணம் மேற்கொண்டு, தேவர்களாக, சிவத்தொண்டர்களாக சாலோக்யம், சாமீப்யம், சாரூப்யம் எனும் படிநிலைகளை எய்தி, இறுதியில், 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன், மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' என்று சிவசாயுஜ்யம் எய்துகின்றார்கள், 'வீடுபெற நில்' என்பதன் கோட்பாடு இதுவே. இப்பெருநிலையை வீடு என்றும், முக்தி என்றும் மோக்ஷ சாம்ராஜ்யம் என்றும் அகண்ட சச்சிதானந்தம் என்றும், சிவனிடத்தில் இரண்டறக் கலத்தல் என்றும் வெவ்வேறு பெயரிட்டுச் சான்றோர் அழைக்கின்றனர். ஜீவபோதத்தை இழப்பதால் அவன் சூன்யமாகிவிடுகின்றானா எனும் கேள்வி பிறக்கிறது. 'அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் நான் பெற்றேன்' என்னும் ஆப்த வாக்கியம் அதைத் தொடர்ந்துவருகிறது. அந்தமில்லாத ஆனந்தமே அகண்ட சச்சிதானந்தம் எனப்படுகிறது. அது பூரணப் பொருள், சூன்யமன்று. ஆங்கு இரண்டுக்கு இடமில்லை.

அப்பெருநிலையை அடைவதற்கு முறையாக, முழுமனத்துடன், துறவறம் பூண்டு முயல்பவன் திருத்தொண்டன். 'முழுமனத்துடன் துறவறம்' என்றால் என்ன?

**மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்**
**உற்றார்க்கு உடம்பும் மிகை**

எனும் குறள் இதனைத் தெளிவுபடுத்துகிறது.

## சைவ சிந்தாந்தத்தில் திருவள்ளுவரின் பங்கு

திருவள்ளுவரை சைவ சித்தாந்தத்துடன் இணைத்துப் பார்ப்பது பொருந்துமா, செய்தக்க செயல் ஆகுமா என்பது ஒரு

பெரிய கேள்விக்குறியே. பொருந்தாமல் அமையலாம், அனால், பொருத்திப் பார்ப்பதில் தவறில்லை.

திருவள்ளுவருக்குரிய பல பெயர்களுள் திருவள்ளுவ நாயனார் என்பதும் ஒன்று. சைவ சித்தாந்தத்திற்கு வித்தாக அமைந்த திருமூலர், 'அன்பே சிவம்' என்றார். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பது வள்ளுவர் வகுத்த வரையறை. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது திருமூலரின் திருமொழி. 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதும், 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பதும் வள்ளுவர் வாக்கு. சைவக் கோட்பாட்டின் பெருநோக்குடன் திருவள்ளுவர் இசைந்தே நிற்கிறார் என்பதற்கு இன்னும் பல குறள்களைச் சான்றாக அளிக்கலாம். இறைவனை எண்குணத்தான் என்கிறது வள்ளுவம். சிவபெருமானும் எண்குணத்தவன் என்பது கோட்பாடு.

## சிவனின் எட்டுக் குணங்கள்:

1. மாசு மறுவற்ற தன்மை (Innocence)
2. எல்லையற்ற அறிவு (Omniscience)
3. தன்னறிவு (Self-knowledge)
4. ஆசைகளிலிருந்து விடுபட்ட நிலை (Freedom from Malas and Stains)
5. பேரின்பம்(Bliss)
6. தூய்மை (Purity)
7. எல்லையற்ற ஆற்றல் (Omnipotence)
8. நன்மை செய்யும் விருப்பம்(Benevolence)

**வள்ளுவர் காணும் இறைவனின் எண்குணங்கள் முறையே,**

1. ஆதிபகவன், 2. வாலறிவன், 3. மலர்மிசை ஏகினான், 4. வேண்டுதல் வேண்டாமை இலான், 5. இருள்சேர் இருவினையும் சேராதவன், 6. பொறிவாயில் ஐந்து அவித்தவன், 7. தனக்குவமை இல்லாதவன், 8. அறவாழி அந்தணன்.

இவ்வாறு இருவர் கண்ட எண்குணங்களும் ஒன்றுபோல் உள்ளமை வியப்பளிப்பதாக உள்ளது என்றாலும் திருவள்ளுவரின் இறைவன் சிவபெருமானே என்று கூறலாகாது. எந்த ஒரு தனிப்பட்ட சமயத்தைச் சார்ந்த கடவுளையும் திருவள்ளுவர் குறிப்பிட்வில்லை என்பதே மெய்மை நிலை.

திருப்பராய்த்துறை ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் போன்ற சிவாச்சாரியர்கள், திருவள்ளுவர் காண்பிக்கும் இறைவன் சிவபெருமானே என்று கருதியிருக்கலாம். ஆனால், திட்டவட்டமாக இக்கருத்தை அவர்கள் யாரும் வெளிப்படுத்தவில்லை.

சைவ நெறியுடன் இசைந்து ஒலிக்கின்ற குறள்கள் இக்கட்டுரையில் ஆங்காங்கு குறித்துக் காட்டப்பட்டுள்ளன. ஆனாலும், சைவ நெறியே வள்ளுவம் என்று கூறுதல் தகாது மட்டுமல்லாமல் பிற எந்தச் சமயத்தையும் சார்ந்ததாக வள்ளுவத்தைக் கருதிப்பார்க்கவும் இயலாது.

சைவர்கள் திருநீறு பூசிக்கொள்வதையோ, ருத்திராட்சமாலை அணிந்துகொள்வதையோ வள்ளுவம் ஏற்பதில்லை. இறைமைக்கு எந்த ஓர் உருவத்தையும் கொடுத்துப் பார்ப்பதையோ எந்த ஒரு பெயரையும் இட்டு வழங்குவதையோ வள்ளுவம் ஒப்பாது.

இவ்வாறு, சமயத்திலுள்ள உருவங்கள், பெயர்கள், குறியீடுகள், சடங்குகள் போன்றவற்றில் வள்ளுவத்துக்கும் சைவத்துக்கும் மாறுபாடுகள் இருப்பினும் சைவ நெறியின் நோக்கத்தையும் ஒழுகலாறுகளையும் வள்ளுவம் உயர்த்தியே பிடிக்கிறது என்பதற்குச் சான்றாக நூற்றுக்கு மேற்பட்ட குறள்கள் உள்ளன.

ஆகவே, உலக ஒருமைக்கும் மனித நேயத்துக்கும் பாடாற்றுகின்ற சைவநெறிக்கு வள்ளுவம் தோள்கொடுத்து நிற்கிறது என்பதால். சைவ நெறி மென்மேலும் வளரவும் மனித சமுதாயத்திற்கு இன்னும் அதிகமான அளவில் பயன் சிறக்கவும், **திருக்குறளைத் துணைக்கு அழைத்துக் கொள்வதில் எந்தவிதத் தயக்கமும் தேவையில்லை.**

அனைத்துச் சமயங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ள திருக்குறளின் துணையை சைவத்திருத்தொண்டர்களும் ஆச்சாரியர்களும் தம்முடைய சமய விளக்கங்களாகச் சேர்த்துக்கொள்வது சைவத்துக்கும் பெருமை, வள்ளுவத்துக்கும் பெருமை. மனித சமுதாயத்துக்கு இந்த இணக்கம், அறன் ஆக்கமாகப் பயன்விளைக்கும் என்பது உறுதி. இன்றைய நிலையில், பொதுமை அறம் நோக்கி, சைவ நெறியாளர்கள் இதனைக் கருதிப் பார்ப்பார்களாக.

**பார்வை நூல்கள்:**


1. திருமந்திரம், திருமூலர், ஆங்கில உரை-மயிலைராமகிருஷ்ணா மடம் வெளியீடு.

2. சிவதத்துவம், ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்-திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ணதபோவனம், திருச்சி மாவட்டம்.

3. சிவன் யார்?-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்-திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ணதபோவனம், திருச்சி மாவட்டம்.

4. திருக்குறள் தெளிவுரை-டாக்டர் மு.வரதராசனார்-சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை.

# சங்கநூல்களிற் சிற்பக்குறிப்புக்கள்

-பேரறிஞர் அ.மா.பரிமணம்

'அரிது அரிது மானுடராதல் அரிது', என்பதும், 'வாய்த்தது ஈதோர் பிறவி மதித்திடுமின்' என்பதும் ஆன்றோர் வாக்குக்களாம். மானுடப் பிறவி அருமையும் மதிப்பும் கொண்டதாகக் கருதப்படுவதற்கு, இயல்பாக அதனிடம் அமைந்துள்ள மனவுணர்வு-ஆறாவது அறிவு காரணமாகும். அந்த மன மாட்சியால் தோன்றும் கலையுணர்வு தான், மானுடம் காலப்போக்கில், பிற உயிரினங்களின்றும் வேறுபட்டு, உயர்ந்து விளங்குவதற்கும் காரணமாகும். இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட குருவி குளவி போன்ற சிற்றுயிர்களின் உணவு, உறைவிடம், பழக்கங்கள் ஆகிய வற்றிற்கும் அவற்றின் இற்றை நாள் நிலைமைக்கும் பெரிய வேறுபாடுகளைக் காணஇயலாமை, அக்கால மக்களின் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றிற்கும் அவற்றின் இற்றை நாள் நிலைமைக்கும் மிகப்பெரிய அளவில் வேறுபாடுகள் காண்பது ஆகியன கொண்டு இவ்வுண்மையினை உணரலாம். கலையுணர்வில்லாத எந்தச் சமுதாய வாழ்வும், விலங்கின வாழ்வு போன்றதாகவே அமையும். அதனால் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த / வாழும் சமுதாயங்கள் தத்தம் சூழலுக்கு ஏற்பக் கலையுணர்வால் சிறந்தே வாழ்ந்துவந்துள்ளன.

அண்மை நூற்றாண்டுகளில், கீழை-மேலை நாடுகளின் அறிஞர்கள் கலைகள் பற்றிப் பல்வகையில் விரிவான விளக்கங்கள் தந்துள்ளார். 'கலைகலைக்காகவே', 'கலைவாழ்விற்காகவே' என்றெல்லாம் வாதம் செய்யும் இயக்கங்கள் தோன்றிக் கலைக் கோட்பாடுகளைத் திறனாய்ந்து வருகின்றன. அவ்விளக்கங்களும் திறனாய்வுகளும் ஒருபுறமிருக்க, கலைபற்றிய ஒரு விளக்கத்தை உளங்கொள்வது பயனுடையதாகும்.மனிதமூளை, ஐம்பொறிகளின் வாயிலாகப் பெறும், காட்சி, செயல், உணர்வு முதலியவற்றைத் தன்னுட் பதிந்து கொள்வது, நினைவு கூர்வது போன்றவற்றைச் செய்வதில் மிகமிகத் திறமைவாய்ந்தது. பல விலங்குகள் இந்த நிலையோடு ஒத்த நிலையினைப் பெற்றிருக்கலாம். ஆனால், தான்

பதிவு செய்தவற்றைத் தான் விரும்பும் வகையில் கற்பனை செய்வதும், அவற்றைத் தக்க வகையில் வெளிப்படுத்துவதும் மனித மூளைக்கே-மனத்திற்கே-உரியவையாகும். பிற உயிரினங்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை. மக்கள் தாம் உணர்ந்தவற்றைக் கற்பனையொடு கலந்தும் கலவாமலும் வெளிப்படுத்துங்கால் அவை கலை உருக்களெனப்படும். அதனால், மக்கள் தம் பொறியுணர்வால் தாம் புறத்தே பெற்றவற்றைக் கற்பனையொடுகலந்து, அழகும் பயனும் அமையுமாறு புலப்படுத்துவது கலை எனக் கொள்ளலாம். அது வெளிப்படுத்தப்படும் தன்மை, ஊடகம் போன்றவற்றால் பல வகையாகவும், பல பெயர்கள் பெற்றும் திகழும். 'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்றது கலை வகைகளின் முடிவான தொகை என்று கொள்வதற்கில்லை 'பழையன கழிதல் புதியன புகுதல்' என்பது கலையுலகிற்கும் பொருந்துவதாகும்.

ஒரு கவிஞர், ஓவியர், மரத்தச்சர், கல்தச்சர், கன்னார், ஆகியோரை அழைத்து ஒருபொருளை நன்கு பார்க்கச் செய்து, அவரவர் வேண்டிய கருவிகள் பொருட்கள் அனைத்தையும் கொடுத்து, அவரவர் திறமையினைக் கலைப்படைப்பாக வெளிப்படுத்துமாறு வேண்டிக்கொண்டால், கவின்மிக்க கவிதை, ஓவியம், மரச்சிற்பம், கற்சிற்பம், உலோகச்சிற்பம் உருவாகக் காணலாம் கவிஞரிடம் கல்லையும் உளியையும், கல்தச்சரிடம் தாளையும் தூரிகையையும் என்றிங்ஙனம் மாற்றி வழங்கப்பட்டால் சிறந்த கலைப்படைப்பினைக் காணவியலாது. அதனால், கலைப்புலப்பாட்டிற்குரிய கலையுணர்வு ஒன்றேயாயினும் அது வெளிப்படும் ஊடகம் முதலியவற்றிற்கு ஏற்ப ஓவியம், சிற்பம் எனப் பலவகையில் அமையும்.

கலைப்படைப்புக்கள் பயன்படும் வகை வேறுபாட்டால், பயன்படு கலைகள், நுண்கலைகள், அழகுக்கலைகள் எனப் பலவகையாக வேறுபடுத்திக் காண்பர். அப்படைப்புக்களை வேறொருவகையில் பார்க்கும் போது, அவை கட்புலனால் நுகரப்படுவன வென்றும், செவிப்புலனால் நுகரப்படுவன வென்றும் வகைபடக் காணலாம். இசை, கவிதை ஆகியன செவிநுகர் கலைகளாகும். அதனைக் கம்பர் 'செவிநுகர் கனிகள்' என்று

குறிப்பிடுவர். சிற்பம், ஓவியம், முதலியன கண்நுகர் கலைகளாகும். நாடகம், நாட்டியம் ஆகியன கண்ணாலும் செவியாலும் நுகரும் கலைகளாகும். இவ்வகையில், இயற்றமிழ் பார்த்துப் பயன் கொள்ளும் வகையிலும், இசைத்தமிழ் கேட்டுப் புயன் கொள்ளும் வகையிலும், நாடகத்தமிழ் கண்டும் கேட்டும் பயன்கொள்ளும் வகையிலும் அமையுமாற்றை உணரலாம்.

கிரேக்கம், எகிப்து, சீனம் போன்றவற்றோடு ஒத்த தொன்மைச் சிறப்பும், நாகரிக மேம்பாடும் கொண்டு விளங்கும் தமிழகம், உயர்தனிச்செம்மொழியாம் தகுதிமிக்க தமிழ்மொழியினைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழகம், சங்க காலத்திற்கு மிகவும் முற்பட்ட காலந்தொட்டே கலைமாட்சி உடையதாகத் திகழ்ந்துவருகின்றது. அந்தக்கலைகளின் கூறுகளைப் பொன்னிடைக் குயின்ற மணிகளைப் போலக் காட்டி நிற்பன சங்கப்பனுவல்களாகும். அவற்றுள் விளங்கும் கலைக் கூறுகளைச் சற்றே காணமுற்படுமுன் சங்கப் புலவர்கள் பற்றிய சில செய்திகளை நினைவிற்கொள்வது இன்றியமையாததாகும்.

இன்று கிடைத்துள்ள சங்கப் பனுவல்கள் கடைச்சங்கக் காலத்திலும், அதற்குமுன்னரும் பல்வேறு புலவர்களால், பல சூழ்நிலைகளில் பாடப்பெற்ற தனிப்பாடல்களின் தொகுப்புக்களேயாகும். அகம் புறம் எனும் பொருள் அடிப்படையில் அமைந்த பாடல்களாதலின் இவற்றில் கலைகள் பற்றிய விரிவான செய்திகளை அவற்றின் தொழில் நுட்பங்கள் தோன்ற விரிவாக அறிய வாய்ப்பில்லை, இறையனார் களவியலுரை, அடியார்க்கு நல்லார் உரை போன்றவை அளிக்கும் குறிப்புக்களிலிருந்து இசை, நாடகம் முதலிய கலைகள் பற்றிய நூல்கள் பல இருந்து அழிந்து போன உண்மையை உணர்தல் கூடும். எனவே, இன்று கிடைத்து வெளிவந்துள்ள சங்கநூல்களிலிருந்து, அவை கலைகளை விளக்குவதற்கென்று தோன்றியன ஆகாமையால், கலைப்படைப்புக்களாகக் காணப்படும் பொருட்களின் வழியாக, கலைகள், அவற்றின் சிறப்புக்கள், நுட்பங்கள் பற்றிய குறிப்புக்களை மட்டுமே அறிதல் கூடும். அவ்வாறு கிடைக்கும் குறிப்புக்கள்

அளவிலும் எண்ணிக்கையிலும் குறைந்தனவேயாயினும். அக்கலைகளின் பெருமையினை அறிதற்குப் போதுமானவையாகும்.

அவற்றுட் சிலவற்றைக் காணுமுன்னர்க் கட்புலனால் உணரத்தக்க கலைபற்றிச் சிறிது காண்போம். எழில் மிக்க ஒரு நங்கையினைக் கட்புலச்செம்மையும் மனவுணர்வும் சான்ற எவர் நோக்கினாலும், அவர் உள்ளத்தில் அக்காட்சி எளிதாகப் பதிந்துவிடும். வேண்டும் போது அக்காட்சியினை நினைவு கூர்வதும் காலப்போக்கில் முற்றிலும் மறந்துவிடுவதும் மிகப் பெரும்பாலோரிடம் காணப்படுவனவாகும். அஃ்ஙனமின்றி அக்காட்சியைத் தம் கற்பனையொடு கலந்து, தாம் அறிந்து, கைவந்த வகையில் வெளியிடுவது மிகமிகச் .சிலருக்கே அமையும் தனித்திறமையாகும். அவர்கள் கலைஞர் எனவும், அவர்கள்தம் படைப்புக்கள் கலைப்படைப்புக்கள் எனவும்படும். அப்படைப்பு முற்கூறியபடி ஓவியம் சிற்பம் என்றினைய பல பெயர்களும் அவற்றிற்கேற்ற பொருண்மையும் எய்தும். எனவே, ஒரு கலைஞன் அல்லது கலை உருவாவதற்குக் காட்சி, அது பதிவுறுதற்குரிய மனத்தளம், அது கற்பனையொடு கலக்கப்பெறும் உளஆற்றல், அதனை வெளிப்படுத்தும் கலைத்திறன் ஆகியன இன்றியமையாதனவாகும். இவற்றின் ஒத்தமைவு இல்லாவிடின் கலைப்படைப்பு நிறைவெய்தாமல் அழியக்கூடும்.

தான் சென்ற வினை முடித்துத் திரும்பும் ஒரு தலைவன், தன் சொல்லை ஏற்று இல்லத்தில் ஆற்றியிருக்கும் தன் தலைவியைக் காணவிரும்பித் தேர்ப்பாகனை விரைந்து தேரினை ஓட்டுமாறு ஏவுகின்றான். இல்லத்தில் இருக்கும் தன் தலைவியை, அவள் நிலையை நினைத்துக்காண்கின்றான் அவனது காட்சியில் அவனைப்பற்றிய கற்பனையும் கலந்து வெளிப்படுகின்றது. காவல் மிக்க வளமனையில், பிறர் யாருமில்லாத தனியிடத்திலிருந்து. தான்வளர்க்கும், கிளியினைத் தன் முன்கையில் ஏந்தி நிற்கின்றாள் தலைவி. தான்பேசுவதனைப் பிறர் அறிவதனை நாணி, பிறர் செவியில் விழாதவாறு, மெதுவாகத் தன் மழலை மொழியில் பேசுகின்றாள். பிரிந்துசென்ற தலைவனைப் பற்றி 'இன்று அவர்

திரும்பிவருவர்' என்று பைங்கிளியே பேசுவாயாக எனக் கிளியிடம் கூறுகின்றாள். இவ்வாறு தன் வருகைக்கு ஏங்கிநிற்கும் அவளைக் காணத் தேரினை விரைவாகச் செலுத்துக என்பது தலைவன் கூற்று.

**"துணையொடு திளைக்கும் காப்புடை வரைப்பில்**
**செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி**
**இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென**
**இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென**
**மழலை இன்சொல் பயிற்றும்**
**நாணுடை அரிவை மாண்நலம் பெறவே"** - (அகம், 13-18).

மதுரை மருதன் இளநாகனார், தாமே ஓர் ஓவியராக மாறி இந்தக் கவினார்ந்த காட்சியினைச் சொல்லோவியமாகக் காட்டியுள்ளார். இந்தக் காட்சியினை ஒரு தச்சன் மரச்சிற்பமாக, ஒரு மண்ணீட்டாளன் சுதைச் சிற்பமாக, ஒரு கன்னான் உலோகச்சிற்பமாக, ஒரு கற்றச்சன் கற்சிற்பமாக வடித்தல் கூடும். இந்தச் சொல்லோவியம் பிற எவ்வகை ஊடகத்தும் புகுந்து வெளிப்பட்டாலும், கலைக்கண்ணுடைய ஒரு நுகர்வாளனால், இளநாகனார் புலப்படுத்திய பொருண்மை அழகினை நுகர்தல் கூடும். சங்கப்பாடல்களில், இதனைப் போலப் பலவகைக் கலைவடிவங்களில் புலப்படுத்தத் தக்க சொல்லோவியங்கள் சிற்பக்கலைக்கான மூலங்கள் எண்ணற்றுத் திகழ்கின்றன. அதனால், சங்கப் பனுவல்களை, எண்ணிலாக் கலைப் படைப்புக்களை வெளிப்படுத்தற்குரிய வித்துக்களைக்கொண்ட கலைக்களஞ்சியங்களாகக் கொள்ளலாம்.

### சிற்பம் முதலிய கலைப்படைப்புக்களின் ஆற்றல்

படைப்பவர் அல்லது சிற்பியின் கலையுணர்வும், அதன் வெளிப்பாடான படைப்பு (சிற்பம் முதலியன) வெளிப்படுத்தி நிற்கும் உணர்வும் இணையும் நிலையில், அதனை நுகர்பவர்தம் உணர்வு கவரப்படுகின்றது. அவர் தம்மை மறந்த நிலையில் அப்படைப்பொடு ஒன்றுபட்டு நிற்கக் காணலாம். இந்த உண்மையை, அழகுணர்ச்சி அடிப்படையில் மேலை நாட்டு ஓவியன் ஒருவன் ஓவியமாகத் தீட்டியுள்ள ( மோனோலிசா- வண்ண ஓவியத்தின் புன்னகை) படைப்பில் அழகுணர் மாந்தர் நாடு இன மொழி

வேறுபாடின்றி ஈடுபட்டிருப்பதும், என்றோ ஒரு தமிழகச் சிற்பி சமய அடிப்படையில் உலோகத்தால் உருவாக்கிய சிற்பத்தில் (நடராசர் திருவுருவம்) கலையுணர் மாந்தர் ஈடுபட்டிப்பதும் கொண்டு உணரலாம்.

தமிழகத்தில், சமயக்கருத்து ஒன்றினை விளக்கப் பல நூற்றாண்டுகளுக்கு முன், செய்யுள் வடிவில் கூறப்பட்ட ஒருவமை இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தி நிற்கக் காணலாம்.

**"மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்துள் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்"**

இச்செய்யுளின் முன்னிரு அடிகளும் உவமையும், பின்னிரு அடிகளும் பொருளும் (உவமேயம்) ஆகும். சமயச் செய்தியான பொருளைவிடுத்துக் கலைத்தொடர்பான உவமையினை நோக்குவோம். தச்சன் ஒருவன் மரத்தால் ஓர் அழகிய யானையைச் செய்து நிறுத்தியுள்ளான். அஃதொரு யானையென்று எண்ணிக் காண்கின்றபோது காண்கின்றவன் கலை உள்ளத்தில் அது மரக்கட்டை (மரத்தாலானது) என்னும் எண்ணம் மறைந்துவிடுகிறது. ஒரு மரவணிகன் அதனைக் காண்பானாயின் அது யானை என்னும் எண்ணமின்றி மரக்கட்டை என்னும் உணர்வே மிக்கிலங்கும். மேலுமொருசெய்யுளில்,

''பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்'' என்னும் உவமை விளங்கக் காணலாம். பொன் (ஆபரணம்) அணி என்று காணும்போது, அது தங்கம் எனும் எண்ணமும், தங்கம் என்று நினைக்கும் போது அணி என்னும் எண்ணமும் மாறிவிடக் காணலாம். இரண்டு உவமைகளுமே, திருமூலரால் கூறப்பட்டனவாகும் (திருமந்திரம் 2290,2289.) 'நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்' என இற்றை நாள்வழக்கிலும், 'அதுவன்றேர் நாய் காணிற் கற்காணாவாறு' (பழமொழி-361) எனப் பண்டைநாட் செய்யுளிலும் இடம் பெறும்

செய்தியும் ஒருவகையில் சிற்பக்கலை மாட்சி தெரிவிப்பதாகக் கொள்ள வாய்ப்புண்டு. மண், மரம், கல், தந்தம், உலோகம் ஆகியவற்றில் படைக்கப்படும் கட்புலக் கலைகளான சிற்பம், கட்டிடம், அணிகள் போன்ற கலைக்கு அடிப்படையாக - மூலமாக - தாய் எனத்தகும் நிலையில் விளங்கக் கூடியது ஓவியமாகும். அதனை 'ஓவு' என்றும் இலக்கியங்கள் குறிப்பிடும்.

இருபரிமாணங்களோடு, வண்ணம்கொண்டோ அஃதின்றியோ அமைக்கப்படும், ஓவியம், சிற்பம் முதலிய வற்றிற்குத் தாயாகும் எனும் நிலையில், கைதேர்ந்த சிற்பியர்களிடம் தூரிகையினையும் வண்ணக்குழம்பினையும், தேவையான படாத்தினையும் கொடுத்தால் அவர்களில் பெரும்பாலோரால் சிறந்த ஓவியத்தை வரைந்துவிட முடியாது. ஆனால், எவ்வகைச் சிற்பியர் உள்ளத்திலும் தாம் உருவாக்க விரும்பும் சிற்ப வடிவம், புனைந்த ஓவியமாகவோ புனையா ஓவியமாகவோ அவர்தம் உள்ளத்தில் முதற்கண் அமைக்கப்படும் என்பதனைக் கலையுலகம் நன்கறியும். குமர குருபரர் என்னும் சொற்சிற்பி மீனாட்சியம்மையினைத் தம் சொற்சிற்பத்தில் வெளிப்படுத்துமுன் அவ்வடிவினைத் தம் மனத்திரையில் ஓவியப்படுத்தியதனை, 'எறிதரங்கம் உடுக்கும் புவனங்கடந்த ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிர்ஓவியமே' என்ற பாடற்பகுதியால் அறியலாம். இமவான், மலைவளர்காதலியாகிய உமையம்மையைத் தன் உள்ளத்தில் எழுதிவைத்த உயிர் ஓவியத்தைத் தாம் தம் உள்ளத்தில் ஏற்றுச் சொல்லோவியமாக வடித்துள்ள பாங்கினைக் காணலாம்.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகட்கு முற்படத் தமிழகத்தை ஆண்ட மாமன்னன் இராசராசனது மானதக் காட்சியில் தோன்றி, அவன் அவைக்களத்திலங்கிய தலைமைச் சிற்பியின் உளத்திரையில் ஓவியமாகி வெளிப்பட்டு எழுந்த கலைப்படைப்பு வானுயர் தோற்றத்தோடு, காலத்தை வென்றிலங்கும் கவினார்ந்து, 'தட்சிணமேரு' எனப்பெறும் தஞ்சைப் பெருங்கோயிலாக - தமிழகச் சிற்பக்கலையின் சிகரமாக இன்றும் விளங்கக்காணலாம். பக்தி

உணர்வுமிகுதியால் பூசலார் என்பார், தன்மனத்தகத்தே பிறர் யாருமறியாமல் கற்பனையில் எழுப்பிய மனக்கோயில், அந்நாளில் ஆண்ட காடவர் கோன் எனும் மன்னர் உலகவர் அறியக் கச்சியில் எடுப்பித்த கற்கோயிலின் மிக்க சிறப்பினதாகச் சிவபெருமான் ஏற்றுகந்த செய்தியினைச் சேக்கிழார் குறிப்பிடுவார். (பெரிய புராணம் பூசலார் புராணம் 5-10) சங்க மருவிய காலத்தது எனக் கருதத்தக்க சிலப்பதிகாரம் தெய்வக் கோயிலமைப்பு வழிபடுநியதி போன்றவற்றைச் சற்றே விரிவாகக் கூறினாலும், திருக்கோயில் (பத்தினிக்கோட்டம்) அமைத்தமைபற்றி,

> **"மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்**
> **பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்"** (சிலப்.28: 224 - 25)

என்று சுருக்கமாகக் கூறச் சேக்கிழார் பூசலார் உருவாக்கிய மனக்கோயிலை விரிவாகக் கூறியுள்ளார். இதனால் கோயிற் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியன காலப்போக்கில் எய்திய வளர்ச்சியினை அறியலாம். சங்ககாலச் சிற்பக் கலைச்செய்தி பற்றிக் காணும்முன்னர் மனங்கொளத்தக்க ஒரு செய்தியினை நினைவிற்கொள்வது நல்லதாகும். அச்செய்தி சங்ககாலத்தைச் சார்ந்தனவென்று துணியத்தக்க சிற்ப, ஓவிய, கட்டடக்கலைப் படைப்புக்கள் எவையும் கிடைக்காமையேயாகும். இன்று கிடைத்துள்ள நடுகற்களில், உருவம் தாங்கிய சிலவற்றைச் சங்ககாலத்தினவென்று உறுதிசெய்வதற்கு, மேலும் சில சான்றுகள் தேவைப்படும் நிலையே உள்ளது.

அரண்மனைகள், அரண்கள், நகர்போலும் வளமனைகள் ஆகிய கட்டடக்ககலைப்படைப்புக்கள் பற்றிச் சில குறிப்புக்கள் சங்க நூல்களில் காணப்பட்டாலும் அவற்றுள் ஒன்றின் சாயலைக் கூட இக்காலத்தே காண இயலவில்லை! ஒரு கால் அவை போர்கள், இயற்கைச் சீற்றங்கள் போன்றவற்றால் முற்றிலும் அழிந்திருத்தல் கூடும். பிற்காலச் சோழ பாண்டியர்களிடையே நிகழ்ந்தபோர்கள் உறந்தை, தஞ்சைபோன்ற பெருநகரங்கள், தீக்கொழுவியும் பிறவகையிலும் அழிவுண்டதனைக் கல்வெட்டுக்கள் உணர்ந்துகின்றன. சங்காலத்தில் எழில்மிகு இயற்கை நிலையங்களாக அல்லாமல் கட்டடமாக அமைந்தன மிகச்சிறிய அளவிலும்

எண்ணிக்கையிலும் இருந்துள்ளன என்பதனைக் கிடைக்கின்ற அரிய சில சான்றுகளால் அறியமுடிகின்றது. சங்க காலத்தை அடுத்த நிலையில் தோன்றிய காப்பியமான *சிலப்பதிகாரமும்*, அக்கால இசை, நாடகக்கலைச் செய்திகளை அறிவித்த அளவு, கட்டடக்கலை, கோயிற்கலை பற்றி விரிவாக அறிவிக்கவில்லை.

பத்தினித் தெய்வத்திற்குச் சிலையெடுப்பதற்காக இமயம் செல்ல முற்பட்டமை, அதன்காரணமாக எழுந்த போரினை வென்றமை, கற்கொணர்ந்து சிலையமைத்தமை, அத்திருக்கோயில் வழிபாடு தொடர்வதற்கு வேண்டியன செய்தமை போன்றவற்றைச் சற்றே விரிவாகக் கூறிய ஆசிரியர் பத்தினிக் கோட்டம் அமைத்தமையினை மிகச் சுருக்கமாக 'நூல்நெறிமாக்கள், பால்பெற வகுத்த' என்று மட்டுமே கூறிச் சென்றுள்ளார். இப்பகுதிக்கு அடியார்க்கு நல்லார் உரைகிடைத்திருக்குமாயின், அக்காலக் கோயிற்கட்டடக் கலை நிலையினை அறியும் வாய்ப்புக் கிடைத்திருக்கலாம். இங்குக்கோயில் அமைத்தமுறை, பயன்படுத்திய பொருட்கள்பற்றி விளக்கமாக அறிய இயலவில்லை. சங்கமருவிய கால இளங்கோவடிகள், பல்லவர்கால மாமன்னன் மகேந்திரவர்மன் ஆகியோர் காலத்திற்கு இடைப்பட்ட நிலையில் தமிழகக் கோயிற்கட்டடக்கலையில் வளர்ச்சிகள் தோன்றியுள்ளன - வேனும் அவற்றையும் காணும் வாய்ப்புப் பெரும்பாலும் இல்லையென்றே கூறவேண்டியுள்ளது. தமிழகக் கோயிற்கட்டட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்த பெருமை பல்லவமகேந்திரவர்மனுக்கே உரியதாகும்.

# தமிழகத்தில் கணபதி

-பேரறிஞர். ந.சுப்பிரமணியன்

சென்ற பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் இந்துக்களால் வணங்கி வழிபடப்பட்டு வரும் கடவுளர் பலரில் முதன்மைத்தானம் பெற்றுள்ளவர் கணபதியே என்பதில் ஐயமிராது. அவரைச் சிவனார்தம் மகனாகக் கூறுவரேனும் வைணவரும் வில்லிப்புத்தூராரைப் போல அவரை முதற்கண் வணங்கியே செயல்படுவதும் ஓர் மரபாகக் காணப்பெறும். அவரியற்றிய பாரதத்தில் தற்சிறப்புப் பாயிரத்தில் 'நீடாழியுலகத்து' என்று துவங்கும் பாடல் முதலாக அக்கடவுளை வாழ்த்தியுள்ளமை கற்றோரறிந்தது. அக்கடவுளுக்குக் கோவில் இல்லாத ஊர் காண்பது அரிது. ஆயினும் அவர் பெருங்கோவில்களில் சிறு உட்கோவிலில் எழுந்தருளுவதே பெரும்பான்மை. தமக்கெனப் படைக்கப்படும் சிறு கோவில்கள் குளத்தங்கரைகளிலும் தெரு மூலைகளிலும் நாற்சந்திகளிலும் எங்குமே காணப்பெறுவனவாம்.

பொதுவாக இவரை இவ்வாறு எல்லோருமே வணங்குவதற்குக் காரணம் இவர் விக்நேசுவரராதலேயாம்; அதாவது இவர் தம்மை வணங்குவாரது இடையூறுகளை விலக்குவாரென்பதோடு தம்மை வணங்குவாரது இடையூறுகளை ஆக்கவும் வல்லவர் என்பதாம். கவிதைகளியற்றுவாரும் கருமங்கள் செய்வாரும் யாத்திரைகள் செல்வாரும் கோவிலில் வழிபடுவாரும் என எல்லோருமே இவரை வழிபட்ட பிறகே பிற கருமம் மேற்கொள்ளுவர் என்பது யாவருமறிந்தது. இவர் சிவபெருமானது பூதகணங்களின் தளபதியாதலின் கணபதி எனப்படுவார்; மற்றும் தேவர்களுக்கும் சிறந்த தலைவராதலின் விநாயகர் என்றும் பெயர் பெறுவார். அப்பிரானது மூத்த பிள்ளையாரான இவரைப் பெரும்பாலும் பிள்ளையார் என்றே யாவரும் அறிவர். ஆயினும் சங்ககால இலக்கியங்களில் இவரைப்பற்றிய குறிப்புக்களே இல்லை என்பதோடு இடைக்கால உரையாசிரியர்களும் முருகப்பெருமானையே 'பிள்ளையார்' என்று குறிப்பிடுவதும் மரபு. **தமிழ் இலக்கியத்தில் இளையபிள்ளையாரான முருகன் முதற்கண்ணும் மூத்த பிள்ளையாரான கணபதி பல**

நூற்றாண்டுகளுக்குப் பிறகும் அறிமுகப்படுத்தப்பெறுவது குறிப்பிடத்தக்கது. கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதி வரையில் இயற்றப் பெற்ற தமிழ் நூல்கள் ஒன்றில் கூடக் கணபதியைப்பற்றிய குறிப்புக்கள் இருந்திருக்கவேண்டிய இடங்களில் கூட அவை ஒன்றுகூடக் காண்பதில்லை. சிலப்பதிகாரம், மணிமேகலை, பரிபாடல், தொகை நூல்களில் கடவுள் வாழ்த்துப்பாடல்கள் ஆகிய இடங்களில் இந்துக் கடவுளரைப் பற்றிய பாடல்கள் மற்றும் குறிப்புக்கள் வருகின்றன. அவை ஒன்றிலேனும் கணபதி குறிக்கப் பெறவில்லை.

தொல்காப்பியர் திருமால், முருகன், இந்திரன்(வேந்தன்), வருணன் என்போரைக் கூறுகிறார்; கொற்றவையைப்பற்றிய குறிப்புக் கிடைக்கிறது. பிற நூல்களில் பலராமர் காமவேள் கலைமகள் ஞாயிறு திங்கள் முதலிய வழிபாட்டிற்குரிய கடவுளர் உளர்; ஆயினும் கணபதியைப் பற்றிய பேச்சேயில்லை. ஆகவே நாம் இப்பொழுது பரவலாக வழிபட்டு வரும் கடவுளான கணபதி இவ்வுருவில் இப்பண்புகளோடு அக்காலத்தில் அறியப்படுவில்லை என்றே கூற வேண்டும். கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு கணபதி பிரபலமாகிறார். அந்நூற்றாண்டிலிருந்து இதுகாறும் வளர்ந்து வந்துள்ள இக்கடவுளின் அம்சங்களாவன: 1.இவர் கழுத்துக்கு மேல் யானை உருவம், அதற்குக்கீழ் மானுட உருவம் உடையவர்; இவர் வாகனம் மூஞ்சூறு. இவருக்கு மிகுதியாகவும் தவறாமலும் படைக்கப்படும் நிவேதனம் தேங்காயும் வெல்லக்கட்டியும் இளநீரும்; அருகம்புல் இவருக்குச் சிறந்தது. இவரைப்பற்றிக் கச்சியப்ப முனிவர் ஒரு புராணம் இயற்றியுள்ளார் (18ம் நூற்றாண்டு). இடைக்காலத்தில் வாழ்ந்து வந்த ஔவையார் (இவர் அதியமான் நெடுமானஞ்சியின் அவைப்புலவரான சங்ககால ஔவையாரினும் வேறானவர்) விநாயகர் அகவல் ஒன்று பாடியுள்ளார்.

ஆயினும் இவரைப்பற்றித் தமிழ் இலக்கியத்தில் முதன் முதல் குறிப்பிடுபவர் திருநாவுக்கரசு நாயனாரே. அந்நாயனார் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் முதற்பகுதியைச் சேர்ந்தவர்; கி.பி.600க்கு முந்திப்பிறந்தவராதல் கூடும். இவர் 80 ஆண்டுகள் வாழ்ந்தவராதலின் கி.பி. 680 வரை வாழ்ந்திருக்கலாம். இவர் வாழ்க்கையின் பிற்காலத்தில் இவரோடு பழகிய திருஞானசம்பந்த

மூர்த்தியும் ஒரு பதிகத்தில் கணபதியைக் குறிப்பிடுகிறார். ஆனால் அப்பர் அடிகள் (திருநாவுக்கரசர்) கணபதியைப் பற்றித் தமது பாடல்களில் நான்கு இடங்களில் குறிக்கிறார்.

**அவையாவன:**

1. திருஅதிகை வீரட்டானம்:
   பல பல காமத்தராகி .......
   கணபதி யென்னும் களிறும் (5ம் பாட்டு)
2. திருப்புறம்பியம்:
   குமரனும் விக்கின விநாயகனும் (10ம் பாட்டு)
3. திருநாரையூர்:
   அறுமுகனோடானை முகற்கப்பன் றன்னை (7ம் பாட்டு)
4. திருவாய்மூர்:
   மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்
   (8ம் பாட்டு)

இவ்வாறு ஏழாம் நூற்றாண்டில் கணபதி திடீரென்று தமிழகத்தில் தோன்றியதன் வரலாற்றை விளக்க முற்படுவோரில் மிகப்பெரும்பாலோர் 'திருத்தொண்டர்களில் ஒருவரான சிறுத்தொண்டர் (பரஞ்சோதி என்னும் இயற்பெயருடையார் 7ம் நூற்றாண்டின் இடைக்காலத்தவர்) பல்லவமன்னனான முதல் நரசிம்மவர்மனோடு சென்று இரண்டாம் புலிகேசியைச் கொன்று வாதாபியை அழித்து அங்கிருந்து பல பொருள்களையும் கவர்ந்து வந்தவர் ஒரு கணபதி விக்ரகத்தையும் கொணர்ந்தார்' என்றும் 'அதனை அவர் தமது சொந்த ஊரான திருச்செங்காட்டங்குடியில் பிரதிஷ்டை செய்தார்' என்றும் 'அப்போதிலிருந்து அக்கோவில் கணப்பதீச்சுரம் என்றும் அக்கடவுள் வாதாபி கணபதி என்றும் பெயர் பெறலாயின' என்றும் கூறுவர். அப்போதிலிருந்து கணபதி வழிபாடு தமிழகத்தில் ஓங்குவதாயிற்று என்பது கருத்து.

ஆயினும் இக்கருத்துக்களைச் சற்று ஆராய வேண்டும். மேற்கூறியவாறு கருத்துக்கூறுவார்க்கு ஆதாரம் சேக்கிழாரது பெரியபுராணமே. அப்புராணத்தில் சிறுத்தொண்டர் ' மன்னவர்க்குத் தண்டு போய் வடபுலத்து வாதாவித் தொன்னகரந்துகளாகப் பகைப்புல'த்திலிருந்து பல பொருள்களைக் கவர்ந்து வந்தார் என்று ஆசிரியர் கூறுகின்றாரேயல்லாமல் எந்த மன்னவருக்கு அவர் தண்டு

போனார் என்று வெளிப்படையாகக் கூறவில்லை. பெரும்பான்மையோர் அம்மன்னவன் முதல் நரசிம்மவர்மன் ஆதல் வேண்டும் என்று கருதுகின்றனர். இக்கருத்து எவ்வளவு பொருந்தும் என்று பார்ப்போம். திருச்செங்காட்டங்குடியில் வந்து தங்கி விட்ட சிறுத்தொண்டர் மனைக்குத் திருநாவுக்கரசரும், ஞானசம்பந்த மூர்த்தியும் வந்தனர் என்றும் அங்கிருந்து சம்பந்தர் மதுரைக்குச் சென்று அங்கிருந்த பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன் என்று புகழ்பெற்ற அரிகேசரி பராங்குசமாறவர்மனைச் சமணத்தினின்றும் மதமாற்றிச் சைவராக்கினார் என்றும் பெரியபுராணத்தில் அறிகிறோம். இம்மாறவர்மன் கி.பி. 670-710 வரை ஆண்டவர். ஆகவே சம்பந்தர் 670 க்குப் பிறகுதான் சிறுத்தொண்டரைச் சந்தித்திருப்பார். அச்சந்திப்பு கி.பி. 680 வாக்கில் இருத்தல் கூடும். அப்படியானால் முதல் நரசிம்மவர்மனது வாதாபிப் படையெடுப்பில் சிறுத்தொண்டர் கலந்து கொள்ளவில்லை என்று தோன்றுகிறது. ஆனால் அவர் வாதாபிக்குத் தண்டு கொண்டு சென்றது எப்போது? எனில் முதல் பரமேசுவரவர்மன் என்னும் பல்லவமன்னன் காலத்தில் வாதாபி படையெடுப்பு ஒன்று பல்லவர்களால் வெற்றியோடு மேற்கொள்ளப்பட்டது என்பது உணரற்பாலது. இப்படையெடுப்பில் தான் சிறுத்தொண்டர் என்னும் பரஞ்சோதி தண்டு கொண்டு சென்றார் எனல் பொருந்துமாறு காண்க. அஃதாயின் சிறுத்தொண்டர் வாதாபியினின்றும் ஒரு கணபதி விக்கிரகத்தைக் கொணர்ந்து திருச்செங்காட்டங்குடியில் பிரதிஷ்டை செய்ததாக வைத்துக் கொண்டாலும் அதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே அப்பர் சுவாமிகள் கணபதியைப் பற்றித் தமது பதிகங்களில் குறிப்பிட்டுள்ளமை கருதற்பாலது. பரஞ்சோதி வாதாபியிலிருந்து பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும் எண்ணில் கவர்ந்து வந்தார் என்று சேக்கிழார் கூறுகிறாரேயல்லாமல் அவர் ஒரு கணபதி விக்ரகத்தைக் கொணர்ந்தார் என்று கூறவில்லை. ஆதலால் திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் உள்ள கணபதிக்கும் பரஞ்சோதியாருக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்று கூறுவதில் தவறு இருக்கமுடியாது. அவ்வாறாயின் அப்பர் அடிகள் குறிப்பிடும் கணபதி ஏழாம் நூற்றாண்டு இடைக்காலத்திலேயே எவ்வாறு தமிழ்நாட்டிற்குள் வந்தது என்பது ஆராய்ச்சிக்கு

இடமாகிறது. கி.பி.6ம் நூற்றாண்டு முடியுங்காறும் காரைக்கால் அம்மையாராலும் ஐயடிகள் காடவர்கோனாலும் குறிப்பிடப்படாத மூத்த பிள்ளையார் ஒரு நூற்றாண்டுக்கால அளவில் எப்படி இங்குப் பிரபலமானார் என்னும் வினாவிற்கு விடை வேண்டும். ஆயினும் ஒன்று: வழக்கில் 'வாதாபி கணபதி' என்று யாவராலும் குறிப்பிடப்படுவதும் நினைவுகூர்தல் வேண்டும்.

வாதாபியினின்று ஒரு கணபதி விக்ரகம் யாரோ ஒருவரால் கொணர்ந்து தமிழ்நாட்டில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருத்தல் கூடும்; அதனின்று தான் தமிழகத்தில் கணபதி வழிபாடு தொடங்கிற்று' என்று கூறுதல் பொருந்தாது என்று தோன்றுகிறது. அப்பரடிகள் தேவாரத்தில் கூறுமாற்றை நோக்கும் போது அவர் காலத்திற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே கணபதியைப் பற்றிய பௌராணிக வரலாறுகள் பலவும் தமிழறிஞர்கள் அறிந்திருந்தனர் என்று கருத இடனாகின்றது.

இதன் விவரத்தை ஆராய்வோம். கி.பி.7ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கால அளவில் இயற்றப்பெற்ற தமிழ் இலக்கியத்தில் கணபதியைப்பற்றிய குறிப்பு யாதொன்றும் இல்லை என்பது உண்மையே. ஆயினும் அக்கடவுளின் ஆதிஉருவம் புகாரிலிருந்ததாகச் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும், பதிற்றுப்பத்திலும் கூறப்படும் பெருஞ்சதுக்கத்துப்பூதம் என்னும் பொதுமக்கள் வழிபாட்டிற்குரியதாக விளங்கிய ஒரு கடவுளே என்று உறுதியாகக் கூறலாம். இஃது இத்துறையில் இதுகாறும் இவ்வாறு சிந்திக்காதவர்களுக்குப் பெரும் வியப்பைத் தருமாயினும் சற்று யோசித்த அளவில் இதன் உண்மை புலப்படும்.

சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூர் எடுத்த காதை வரிகள் 128 முதல் 134 வரை

**தவமறைந் தொழுகும் தன்மை யிலாளர்**
**அவமறைந் தொழுகு மலவற் பெண்டிர்**
**அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்**
**பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்**
**கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்**
**காத நான்குங் குரலெடுப்பிப்**
**பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்........**

என்று புகாரிலிருந்த பெருஞ்சதுக்கத்துப் பூதத்தின் தன்மை விரித்துரைக்கப்பட்டுள்ளது. பூதம் நின்ற மன்றம் புகாரிலிருந்த ஐவகை மன்றங்களில் ஒன்று. இதன் பெயர் பூதசதுக்கம் என்பது; இது அல்லது செய்தாரைப் பாசத்தாற் கட்டிப் புடைத்துண்ணும் என்னும் செய்தி கூறப்படுகிறது. இதைப்பற்றி மணிமேகலை சிறைசெய்காதையில் வரிகள் 54 முதல் 56 வரையில்

**யான்செய் குற்றம் யானறி கில்லேன்**
**பொய்யினை கொல்லோ பூத சதுக்கத்துத்**
**தெய்வ நீ யெனச் சேயிழை யரற்றலும்**

என்று கூறப்பட்டுள்ளது. இச்செய்திகள் கி.பி.2ம் நூற்றாண்டு இறுதிக் காலத்தவை. இதற்குச் சில காலம் கழித்து அதாவது மூன்றாம் நூற்றாண்டு முடியுமுன் இப்பூதம் அதுவரையில் மந்திர மரபில் வைதிக முறையில் வழிபடப்படாமல் இருந்து இளஞ்சேரலிரும் பொறை என்னும் சேர மன்னனால் புகாரிலிருந்து வஞ்சிக்குக் கொணரப்பட்டு அங்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆய்ந்த மரபில் சாந்திவேட்டு மந்திர மரபில் தெய்வமாகப் பேணப்பெற்று அச்சேரர் தலைநகரில் வழிபடப் பெறலாயிற்று என்பது பதிற்றுப்பத்து 9ம்பத்துப் பதிகத்தால் விளங்கும். அப்பதிகத்து அடிகளைக் கீழ்க்கண்டவாறு அமைத்துப் படித்துக் கொள்க.

**மெய்யூ ரமைச்சி யன்மையூர் கிழானைப்**
**புரையறு கேள்விப் புரோசு மயக்கி**
**அருந்திறன் மரபிற் பெருஞ்சதுக் கமர்ந்த**
**வெந்திறற் பூதரைத் தந்திவ ணிறீஇ**
**வஞ்சி மூதூர்த் தந்துபிறர்க் குதவி**
**மந்திர மரபிற் றெய்வம் பேணினான்**

என்க.

இம் மேற்காட்டப்பெற்ற மேற்கோள்களின்றும் நாம் பெறும் கருத்துக்கள்: கி.பி.2,3 நூற்றாண்டுகளில் புகார் மற்றும் பிற பெரு நகரங்களில் பெரும் சதுக்கங்களில் ஒரு தெய்வம் நின்றிருந்தது. அது சிலையாகச் செய்யப்பட்டு நாற்சதுக்கங்களில் நிறுத்தப் பெற்றிருந்தது. அது தீமை செய்தவரைத் தம் பாசத்தால் பிணித்துக் கையாற்புடைத்து உண்ணும் இயல்பினது. அதன் கையில் ஒரு

பாசக்கயிறு உண்மை காணப்படும். அது தீயோருக்கு விக்நம் செய்ததால் நல்லோர்க்குப் பாதுகாப்பு அளித்தது என்பது பெறப்படும். அது விக்நத்தை ஆக்கவும் நீக்கவும் வல்லது. அக்காலத்தில் எழுந்த கணபதியும் பாசக் கயிற்றைக் கைக்கொண்டு விக்நத்தை ஆக்கவும் போக்கவும் வல்லவராகக் கருதப்பட்டமை இவற்றிடையே ஒற்றுமை ஆகும். அன்றியும் புகார்ச் சதுக்கத்திலிருந்த தெய்வம் ஒரு பூதம்; பிள்ளையார் பூதங்களின் பதி. அப்பூதம் நாற்சந்தியில் நின்றது; பிள்ளையார்க்குக் கோயிலிலும் நாற்சந்தியிலும் குளக்கரையிலும் என்பதறிவோம். பெரும்சதுக்கத்துப்பூதநாதன் என்புழிப் பூதநாதன் கணபதி என்பதன் நேர்ப்பரியாயம் என்பதில் தடையில்லை. அந்தப்பூதத்திற்கு மந்திரமரபில் வழிபாடு இளஞ்சேரலிரும்பொறையால் ஏற்படுத்தப்பட்ட பிறகு அக்கடவுள் ஆரியர் கடவுள்குழாத்துள் சேர்க்கப்பெற்றுச் சிவபிரானின் மகனாக அக்கோயில்களில் எழுந்தருளத் தொடங்கினார் என்பது வெளிப்படை. மலைவாழ்முருகன் இமவான்மகளின் மகனான பிறகு சதுக்கத்துப்பூதம் பூதங்கள் சூழநிற்கும் சிவபிரானின் மகனானது வியப்பிற்குரியதன்று.

இது கி.பி.3-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த பிறகு மூன்று நூற்றாண்டுகள் கழிந்தன. அக்காலத்தில் நிகழ்ந்த செய்திகளை மிகுதியாக அறிவதற்கு வாய்ப்பில்லை, வரலாற்றுச் சான்றுகள் இன்மையால்; ஆயினும் கணபதி வழிபாடு அக்கால அளவில் முதிர்ந்து வந்து கி.பி.7-ம் நூற்றாண்டில் அப்பரடிகள் கண்ட கணபதி வழிபாடாக மாறி நின்றது என்பதில் முரண்பாடு காண இயலாது.

ஆகவே தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையிலும் யானைமுகக்கடவுள் தமிழகத்தவராயிருத்தலிலும் யானையைத் தோற்ற (totem) மாகக் கொண்ட பழங்காலக்குடிகளின் வழிபாட்டின் வழிவந்தவராதலிலும் சதுக்கப்பூதத்தின் பிற்கால உருவாக அமைந்திருத்தலிலும் வரலாற்றுக்கண்கொண்டு பார்ப்போர் முரண்பாடு ஒன்றும் காணார். இந்நாட்டின் பிறபகுதிகளில் கணபதி வழிபாடு எவ்வாறு தொடங்கியிருப்பினும் அதனால் நாம் கூறியுள்ள மேற்கண்ட கருத்துக்கள் பாதிக்கப்படமாட்டா என்றே கருதுகிறோம்.

# யானைமலை நரசிங்கப்பெருமாள்கோவில்

-பேரறிஞர் வெ. வேதாசலம்

மதுரைக்கு வடக்கே எட்டுக் கிலோமீட்டர் தொலைவில் அமைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க குன்றம் யானைமலையாகும். சமணம்,சைவம்,வைணவம் முதலிய பல சமயத்தவரின் வழிபாட்டுத் தலங்கள் ஒருங்கேயமைந்த சமயச்சிறப்பு வாய்ந்தது. கி.பி.முதல் நூற்றாண்டு முதல் நாயக்கர்காலம் முடியவுள்ள பல்வேறு காலகட்டங்களைச் சார்ந்த தமிழ்பிராமி, தமிழ்,வட்டெழுத்துக்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் இங்கு இருக்கின்றன.[1] பல்வேறு சமயங்களில் பழங்காலச் சிற்பக்கலைக்கும் கட்டடக்கலைக்கும் சான்றாக உள்ள பாறைச்சிற்பங்கள், குடைவரைக்கோயில்கள், கட்டடக்கோயில்கள் இக்குன்றத்தில் உள்ளன.

இம்மலையின் உச்சியிலுள்ள இயற்கையான குகைத்தளத்தில் சமணமுனிவர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்துள்ளனர். இதனை அங்குள்ள கி.பிமுதல் நூற்றாண்டுத் தமிழ்பிராமி கல்வெட்டு தெரிவிக்கிறது. இம்மலையில் கி.பி.ஏழாம் நூற்றாண்டிலும் அதனைத் தொடர்ந்தும் சமணர்கள் தங்கள் வழிபாட்டுத் தலங்களை அமைத்து வாழ்ந்து வந்தனர். கி.பி.ஏழாம் நூற்றாண்டில் மதுரைக்கு வந்த திருஞானசம்பந்தர் மதுரையைச் சூழ்ந்துள்ள ஆனைமலை போன்ற இடங்களில் சமணமுனிவர்கள் வாழ்ந்துள்ளதைத் தமது மதுரைப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். இக்குன்றில் கி.பி.9,10 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த அழகிய சமணத்திருவுருவங்கள் அதனடியில் பொறிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டுகளுடன் காணப்படுகின்றன. சைவசமயமும் இக்குன்றின் ஒருபுறம் செல்வாக்குடன் திகழ்ந்தது என்பதற்குச் சான்றாக முருகப்பெருமானுக்காக இங்கு எடுக்கப்பட்ட குடைவரைக் கோயில் விளங்குகிறது. கலையழகு மிக்க பாண்டியர்காலச் சிற்பங்கள் இதிலுள்ளன. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வட்டக்குறிச்சி என்ற ஊரைச் சார்ந்த பட்டசோமாசி பரிவிராஜகர் என்ற சைவத்துறவி இதனை எடுப்பித்துள்ளார்.[2]

யானைமலை என்று பெயர் பெற்றுவிளங்கிய இக்குன்றத்தினை ஒட்டி அமைந்திருந்த ஊர்ப்பகுதி நரசிங்கமங்கலம் என்று முற்காலப் பாண்டியர்காலம் முதல் அழைக்கப்படலாயிற்று. தற்போது இதுவே சுருங்கி நரசிங்கம் என்று வழங்கிவரப்படுகிறது. கி.பி. 770 - ல் நரசிங்கப்பெருமாள் குடைவரைக்கோயிலைப் பாண்டியமன்னனின் அமைச்சர் மாறங்காரி தோற்றுவித்தபோது அதனையொட்டி அந்தணர்கள் வாழும் குடியிருப்பையும் யானைமலைக்கு அருகில் அமைத்தான். அதுவே நான்மறை வல்ல பிராமணர்கள் வாழும் குடியிருப்பு என்ற பொருளில் நரசிங்கப்பெருமாளின் பெயரால் நரசிங்கமங்கலம் என்று அழைக்கப்பட்டது.

## நரசிங்கப்பெருமாள்கோவில்

கி.பி.770-ல் வைணவ சமயம் இம்மலையில் காலூன்றியது. அதுமுதல் மற்ற சமயத்தவர் கோயில்களைக் காட்டிலும் யானைமலை நரசிங்கப்பெருமாள்கோயில் தலையாய சிறப்புப்பெற்றது. இம்மலையிலுள்ள மற்றக் கோயில்களைக் காட்டிலும் சோழர், இடைக்காலப்பாண்டியர், பிற்காலப்பாண்டியர், விசயநகரவேந்தர்கள், மதுரை நாயக்கமன்னர்கள் ஆதரவுபெற்று இப்பகுதியில் பெருங்கோயிலாக இது மலர்ந்தது. யானைமலையின் மேல்புறம் தாமரைபூத்த பெருந்தடாகத்தின் கரையில் இது அமைந்துள்ளது. ஆண்டுதோறும் திருமோகூர் காளமேகப்பெருமாள் இங்கு எழுந்தருளி கஜேந்திரமோட்சத்திரு நாள் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## தலவரலாறு

மதுரையிலிருந்து நரசிங்கப்பெருமான்கோயில் அமைந்துள்ள குன்றம் நோக்கி வருவார்க்கு அது யானையொன்று முன்புறம் துதிக்கையை நீட்டி அமர்ந்தகோலத்தில் இருப்பது போன்று காட்சியளிக்கும். இதன் காரணமாக இது மிகப்பழங்காலத்திலிருந்து யானைமலை என்று அழைக்கப்பட்டு

வரப்படுகின்றது. சமணர்கள் வாழ்ந்த இக்குன்றில் வைணவமும் சைவமும் செல்வாக்கு அடைந்த பிறகு இம்மலை மற்றும் நரசிங்கப்பெருமாள்கோயிலின் தோற்றம் குறித்துப் புராணவரலாறு ஒன்று எழுந்துள்ளது. பெரும்பற்றப்புலியூர்நம்பியின் மதுரை திருவிளையாடல்புராணத்திலும் பரஞ்சோதிமுனிவரின் மதுரை திருவிளையாடல்புராணத்திலும் யானைமலை மற்றும் நரசிங்கப்பெருமாள்கோவில் தோற்றம் குறித்தப் புராணக்கதைகள் காணப்படுகின்றன. இப்புராணங்களில் இது யானை எய்த திருவிளையாடலாகக் கூறப்படுகிறது.

பாண்டியனை வீரத்தால் வெல்லமுடியாத சோழ மன்னன் ஒருவன் சூழ்ச்சியாலும் மந்திரத்தாலும் அவனை அழிக்கக் கருதினான். அதற்காக உதவியை நாடித் தன்னாட்டிலிருந்த சமணர்களுக்கு ஓலை அனுப்பினான். சமணர்களும் அதற்கு உடன்பட்டனர். அசோகமரத்தின் நிழலில் பெரும் யாகத்தீயை வளர்த்தனர். அதிலிருந்து மூன்றுவுலகும் நடுங்கச் செய்யும் பெரும் யானை ஒன்றை வெளிவரச்செய்தனர். மதுரையோடு பாண்டியனையும் அழிக்கும்படி அதனை ஏவிவிட்டனர். பெருமுழக்கத்துடன் அவ்யானை மதுரை நோக்கி வருவதைப் பாண்டியலுக்கு அவனது ஆட்கள் அறிவித்தனர். பாண்டியன் அஞ்சி மதுரைக்கோயிலில் உறையும் சிவபெருமானிடத்து அதனைத் தடுக்குமாறு வேண்டினான். அப்போது பாண்டியன் யானையை அழிக்க மதுரைக்கு வெளியே கீழ்புறத்தில் 'அட்டாலைமண்டபம்' ஒன்றைக் கட்டுமாறு வானொலி கேட்டுக் கட்டி முடித்தான். பாண்டியன் கட்டிய அட்டாலைமண்டபத்தின் மீது அட்டாலைச் சேவகனாய் சிவபெருமான் தோன்றினார். நரசிங்காஸ்திரத்தால் (அரிமுகமால் வாளி, சிங்கமுகக்கணை)சமணர்கள் ஏவிய யானையை அழித்தார். அதுவே அனைவரும் காணும்படி யானைமலையானது. அக்குன்றத்திலேயே இரணியனை அழித்த திருமாலின் பெருமை விளங்கும்படி நரசிங்கப்பெருமாளுக்குக் கோயில் ஒன்றைப் பாண்டியமன்னன் எடுத்தான் என்று பெரும்பற்றப்புலியூர் திருவிளையாடல்புராணம் கூறுகிறது.

**பாவியர் விட்ட கொற்றப் பருப்பத விபத்தைவீழ**
**மூவர்க டலைவன் சிங்க முகக்கணை விடுத்த லாலே**
**காவல னவதா னத்தைக் காசினி காண நண்ணி**
**மேவரு நரசிங் கத்தை யிருத்தினான் வேழக் குன்றில்.**

யானையின் மீது நரசிங்கக்கணை பாய்ந்த இடத்திலேயே இன்று நரசிங்கப் பெருமாள் எழுந்தருளி அனைவராலும் வழிபடப்பட்டு வருகின்றார் என்று பக்தர்கள் கருதுகின்றனர். பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடல்புராணம் உரோமசன்மன் என்ற பாண்டியனின் மகன் ஒருவன் நரசிங்கப்பெருமானை இங்கு வந்து வணங்கித் தன் பெயரால் தீர்த்தக்குளம் ஒன்றைத் தோற்றுவித்தான் என்று கூறுகிறது. மேலும் இரணியனின் மகனான பிரகலாதனும் யானைமலை நரசிங்கப்பெருமானை வழிபட்டு என்றும் அழியா முடிவில்லாத பெருவரத்தைப் பெற்றான் என்று யானைமலை நரசிங்கப் பெருமாளின் பெருமையை எடுத்துரைக்கிறது.

**சிலத்தரித் திறவா அவுணன்மார் பிடந்த**
**சிங்கநா யகனையங் கெய்தி**
**அலகில்மா தவஞ்செய் துரோமசன் தன்பேர்**
**அறியவோர் தீர்த்தமுண் டாக்கி**
**இலகுபே றடைந்தான் பிரகலா தனுநோற்**
**றீறிலாப் பெருவரம் அடைந்தான்.**

## திருக்கோயிலின் தோற்றமும் அமைப்பும்

முற்காலப்பாண்டியப் பேரரசின் மன்னனான முதல் வரகுணபாண்டியனின் (கி.பி.765 - 815) அமைச்சனாக விளங்கியவன் மாறன்காரி ஆவான். திருநெல்வேலிக்கு அருகில் அமைந்த களக்குடி(கரவந்தபுரம்) என்ற ஊரில் தோன்றிய இவன் மூவேந்தமங்கலப்பேரையன் என்றும் மதுரகவி என்றும் அழைக்கப்பட்டான். வைணவ ஆழ்வார்களில் நம்மாழ்வார்க்குக் காரிமாறன் என்ற பெயர் இருந்துள்ளது. இதனால் யானைமலைக்

கல்வெட்டில் குறிப்பிடும் பாண்டியர் அமைச்சனான இம் மாறன்காரிக்கும் நம்மாழ்வார்க்கும் தொடர்பு உண்டு எனக் கருதுகின்றனர். ஆனால் மாறங்காரியான மூவேந்தமங்கலப் பேரரையன் களக்குடி என்ற ஊரில் வைத்திய குலத்தில் தோன்றியன் ஆவான். இவன் பாண்டியமன்னன் முதல்வரகுணன் வெளியிட்ட வேள்விக்குடிச்செப்பேட்டு ஆணையை நிறைவேற்றி வைக்கும் ஆணத்தியாக விளங்கியவன். பல போரில் பங்குகொண்டு பாண்டியருக்கு வெற்றியை ஈட்டித் தந்தவன் பாண்டியர்க்கும் கங்கர்க்கும் மணவுறவு ஏற்படுத்திப் பல அரியசெயல்களைச் செய்தவன் ஆவான். இவனது தம்பியாக விளங்கியவன் மாறன்எயினன் ஆவான். இவனுக்குப் பாண்டிமங்கல விசையரையன் என்ற பெயரும் உண்டு.

பெரும்புகழும் வல்லமையும் படைத்த முதல்வரகுண பாண்டியனின் அமைச்சனான மாறங்காரியே யானைமலையின் மேல்புறத்தில் நரசிங்கப்பெருமாளுக்கு கி.பி.770-ல் குடைவரைக்கோயில் ஒன்றைத் தோற்றிவிக்க முற்பட்டான். ஆனால் அது குறைப்பணியாய் முற்றுப்பெறாமல் நின்றது. அதன்பிறகு பாண்டிய மன்னனின் அமைச்சர் பதவிக்கு வந்த மாறன்காரியின் தம்பி மாறன்எயினன் அண்ணன்விட்ட இக்குறைப்பணியை நிறைவேற்றி முடித்தான். இக்கோயிலுக்குரிய முகமண்டபத்தையும் எடுத்து மங்கல நீராட்டினான்.( நீர்தளித்தான்)

இச்செய்தியைத் தெரிவிக்கும் இரண்டு மிக முக்கியமான கல்வெட்டுகள் நரசிங்கப்பெருமாள் குடைவரைக்கோயிலின் முகமண்டபத்தில் வாயின் வலதுபுறமும் இடதுபுறமும் பொறிக்கப்பட்டுள்ளன.[3] இவை இரண்டும் முற்காலப்பாண்டிய மன்னரின் ஆட்சிக்காலத்தை வரையறுக்கத் துணைசெய்யும் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுகள் ஆகும். இவற்றில் ஒன்று வட்டெழுத்தில் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளது. மற்றொன்று கிரந்த எழுத்தில் வடமொழியில் எழுதப்பட்டுள்ளது. வடமொழியில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டிலேயே 'சிலாக்கிருகம்'

(கற்றிருக்கோயில்) என்றழைக்கப்பட்ட இக்கோயில் கலியுக ஆண்டு 3871-ல் கார்த்திகை மாதம், ஞாயிற்றுக்கிழமை (கி.பி.770 நவம்பர் 4ஆம் தேதி ) மாறங்காரி என்றழைக்கப்பட்ட மதுரகவியால் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. மேலும் யானைமலைப் பகுதியில் அந்தணர்குடியிருப்பு ஒன்று (பிரமதேயம் நரசிங்கமங்கலம்) இவன் ஏற்படுத்தியதைத் தெரிவிக்கிறது. தமிழ்மொழிக் கல்வெட்டில் கும்பாபிசேகம் என்ற வடசொல்லுக்கு 'நீர்தெளித்தல்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாண்டியமன்னரின் அமைச்சர்களாக விளங்கிய மாறன்காரி, மாறன்எயினன் ஆகியோர் எடுப்பித்த நரசிங்கப்பெருமாள் குடைவரைக்கோயில் சிறிய சதுரமான கருவறையும் அதற்கு முன்னர் அமைந்த முகமண்டபத்தையும் கொண்டு விளங்குகிறது. கருவறையில் யோகாசனத்தில் குத்திட்டு அமர்ந்தகோலத்தில் நரசிம்மர் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றார். அவரது உருவம் தனியாகச் செய்து வைக்கப்படாமல் பாறையிலேயே வெட்டிச் செய்விக்கப்பட்டுள்ளது. பொலிவான அவரது முகத்தைச் சிங்கத்தின் அடர்ந்தயான ரோமங்கள் அணிசெய்கிறது. பின்னிரு கரங்கள் சங்கும் சக்கரமும் ஏந்தியுள்ளன. முன்னிருகரங்களை மடித்த முழங்காலின் மீது வைத்தமர்ந்திருக்கும் இந்நரசிங்கப் பெருமானின் கோலம் முற்காலப்பாண்டியரின் அரிய படைப்பாகும்.

வட்டெழுத்து, கிரந்த கல்வெட்டுகள் காணப்படும் கருவறையை அடுத்துள்ள முகமண்டபத்தினை இரண்டு முழுமையான கனமான தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் தாங்கிநிற்கின்றன. குடைவரையின் இம்முகமண்டபத்தினைத் தொடர்ந்து கி.பி.11,12 ஆம் நூற்றாண்டுகளில் கற்களை அடுக்கிக் கட்டப்பட்ட அர்த்தமண்டபமும் மகாமண்டபமும் எடுக்கப்பட்டிருக்கவேண்டும். அவை பழுதுபட்ட நிலையில் கி.பி.15,16 ஆம் நூற்றாண்டுகளில் விரிவான பெரியமண்டபங்களாக விசயநகர வேந்தர்காலத்திலும் மதுரை

நாயக்கர் காலத்திலும் எடுப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது இம்மண்டபங்களில் ஏற்கனவே இங்கிருந்த இடைக்காலப், பிற்காலப்பாண்டியர் காலக் கல்வெட்டுகள் பொறித்த கட்டடக்கற்கள் இம்மண்டபங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இம்மண்டபங்களில் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாமல் பாண்டியர்காலக் கல்வெட்டுகள் பொறித்த கற்கள் பல காணப்படுகின்றன.

தற்போது நரசிங்கப்பெருமாள்கோயில் பெரிய சுற்று சுவருக்குள் நரசிம்மபெருமாள் சன்னதி, நரசிங்கவல்லித்தாயார் சன்னதி என்று இரண்டு சன்னதிகளைக் கொண்டு விளங்குகிறது. இக்கோயிலுக்குள் நுழைந்தவுடன் வடப்புறம் நரசிங்கவல்லித்தாயர் கோயில் தெற்குநோக்கி அமைந்துள்ளது. இதனை நாயக்கர்காலத்திற்குப் பின்னர் புதுப்பித்துக் கட்டியுள்ளனர். அண்மைகாலத்திலும் இதற்குத் திருப்பணி செய்துள்ளனர். கருவறையின் உள்ளே சுகாசனத்தில் அமர்ந்த கோலத்தில் கருணைபொலியும் முகத்துடன் தாயாரின் திருக்கோலம் தோற்றமளிக்கிறது. தாயாரது மேலிருகரங்கள் தாமரைமலர்களை ஏந்தியுள்ளன. முன்வலக்கரம் அபயமும் முன்இடக்கரம் வரமளிக்கும் வரதமுத்திரையும் காட்டுகின்றன.

தாயார் கோயிலைக் கடந்து நரசிங்கப்பெருமாள் சன்னதிக்குள் நுழைந்தவுடன் தொடக்கத்தில் கருடமண்டபம் காட்சியளிக்கிறது. இதனை அடுத்து சிம்மங்களைத் தாங்கி நிற்கும் அணியொட்டிக் கால்களைக் கொண்ட பெருந்தூண்களையும் சிறிய தூண்களையும் கொண்ட மகாமண்டபம் விளங்குகிறது. இவற்றில் பாண்டியர்காலத் தூண்களும் காணப்படுகின்றன. இங்குள்ள பெருந்தூண்கள் கி.பி.16 ஆம் நூற்றாண்டு விசயநகரவேந்தர் பாணியில் விளங்குகின்றன. இம்மண்டபம் கி.பி.16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் முறையில் இதன் வெளிப்புறத்தில் வாயிலுக்கு வடபுறம் விசயநகரவேந்தரான கிருட்டிணதேவராயரின் வடமொழிக் கல்வெட்டு காணப்படுகிறது.[4]

இம்மகாமண்டபத்தினைக் கடந்து உள்ளே சென்றால் குடைவரைக்கு முன்புள்ள சிறிய மண்டபத்தினை அடையலாம். இதுவும் விசயநகரவேந்தர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதாகும். இதனைப் பல சிறிய பாண்டியர்காலத் தூண்களும் சிம்மங்களைத் தாங்கும் அணியொட்டிக் கால்களைக் கொண்ட பெருந்தூண்களும் தாங்குகின்றன. இக்கோயிலின் வெளிப்புறத்தினை ஒட்டி வடதிசையில் மிகப்பெரிய் அழகிய தாமரைக்குளம் காட்சியளிக்கிறது.

## கல்வெட்டுகள் தரும் வரலாறு

நரசிங்கப் பெருமாள்கோயிலில் கீழ்க்கண்ட மன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன.

முதல்வரகுணபாண்டியன் (கி.பி.765-815) கல்வெட்டு - 2

முதற்பராந்தகசோழன் (கி.பி.907-955) கல்வெட்டு - 1

சடையவர்மன் சுந்தரசோழபாண்டியன்(கி.பி.1021-1051)- 2

சடையவர்மன் ஸ்ரீவல்லபாண்டியன்(கி.பி.1101-1124) கல்வெட்டு - 2

முதல்மாறவர்மன் சுந்தரபாண்டியன்(கி.பி.1216-1236) கல்வெட்டு - 1

கிருஷ்ணதேவராயர்(கி.பி.1503-1529)கல்வெட்டு - 1

மொத்தக் கல்வெட்டுகள் - 9

இக்கல்வெட்டுகள் தவிர இடைக்காலப் பிற்காலப் பாண்டிய மன்னர்களது முழுமையற்ற துண்டுக்கல்வெட்டுகளும் கோயில் மண்டபங்களிலும் திருச்சுற்றுச் சுவரிலும் காணப்படுகின்றன.

*அடுத்த இதழில்...*

அன்பு அச்சகம், மதுரை - போன் 741116